Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of

**மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை**

**பாடம்: நடனம் - பரதம்**

**வாரம் - 6**

**தரம்: 11**

**ஆக்கம்: ஆசிரியை S. சானு பிரியதரஷனி**
**கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்**

## பகுதி 1

**சரியான விடையின் கீழ் கோடிடுக**

1. பரத நாட்டியத்திற்கு அணிசேர்க்கின்ற தோல் வாத்தியம்
   1) வயலின் 2) வீணை 3) மிருதங்கம் 4) புல்லாங்குழல்

2. மேதா என்பது
   1)வேகம் 2) புத்திக்கூர்மை 3) உறுதி 4) ஆர்வம்

3. ஜாதி பேதங்களால் மாற்றமடையும் அங்கம்
   1) லகு 2) துருதம் 3) அனுத்ருதம் 4) புலுதம்

4. கண்டஜாதி துருவதாளத்தில் இறுதி லகுவை நீக்கினால் வரும் தாளத்தின் அட்சர எண்ணிக்கை
   1) 10 2) 12 3) 15 4) 17

5. மகாபலிச்சக்கரவர்த்தியின் அகந்தையை அடக்க எடுத்த அவதாரம்
   1) வராகம் 2) பரசுராமன் 3) வாமணன் 4) பலராமன்

6. இராஜவாத்தியம் என்றழைக்கப்படுவது
   1) மிருதங்கம் 2) வீணை 3) நாதஸ்வரம் 4) தவில்

7. தாத்தா என வர்ணிக்கப்படும் நாட்டியக்கலைஞர்
   1) மீனாட்சி சுந்தரம்பிள்ளை 2) இராமையாபிள்ளை
   3) கோபாலகிருஸ்ணர 4) அருணாசலக்கவிராயர்

8. இராஜராஜேஸ்வரம் கட்டப்பட்ட நூற்றாண்டு
   1) 8ஆம் 2) 10ஆம் 3) 12ஆம் 4) 15ஆம்

9. ஒரு தாளத்தின் அங்கங்கள் யாவற்றையும் ஒரு முறை பூரணமாகப் போட்டு முடித்தல்
   1) அங்கம் 2) துருதம் 3) லயம் 4) ஆவர்த்தனம்

10. ரூபக தாளத்தில் கோர்வை அமைக்கும் போது ஒரு ஆவர்த்தனத்தில் அடங்குகின்ற மாத்திரைகளின் எண்ணிக்கை

    1) 16 2) 24 3) 32 4) 64

## பகுதி 2

1) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.
   1. பல்லக்கு என்பதனை அபிநயிக்க பிரயோகிக்கும் முத்திரை எது?
   2. காம நினைவை ஏற்படுத்தும் மலர் எது?
   3. விருத்தங்கள் இழுத்துப்பாடும் முறை கொண்ட கூத்து மரபு எது?
   4. மயூர முத்திரை கொண்டு அபிநயிக்கும் பாந்தவ்ய ஹஸ்தம் எது?
   5. பெண்களால் மட்டும் ஆடப்படும் கூத்தின் பெயர் என்ன?
   6. இராஜராஜசோழனின் விருதுப் பெயர்களில் ஒன்று எழுதுக.
   7முல்லைத்தீவு பிரதேசத்திற்குறிய கூத்து எது?
   8. நள்ளிரவில் சுடுகாட்டில் ஆடப்பட்ட தாண்டவம் எது?
   9. கதகளியில் பச்சை வேஷம் அணியக்கூடிய பாத்திரங்கள் 2 தருக.
   10. சங்க கால ஆடல் பற்றிக் கூறும் இலக்கியங்கள் 2 எழுதுக்

2) பின்வரும் ஹஸ்தங்களுக்குரிய விநியோகங்களை கருத்துடன் எழுதுக.
   1.அஞ்சலி 2.புஸ்பபுடம் 3.கடகாவர்த்தனம் 4.சம்புடம்